
# இரட்சிப்பு

## RATCHIPPU

RATCHIPPU = SALVATION


Volume-13 | September-2023 | Issue-04

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-


# வியத்தகு ஆசிரியர் இயேசு

இயேசுவின் போதனையைக் கேட்ட மக்கள் கூட்டத்தினர் வியப்பில் ஆழ்ந்தனர். ஏனெனில், அவர்களுடைய மறைநூல் அறிஞர்களைப்போலன்றி இயேசு, அதிகாரத்தோடு அவர்களுக்கு கற்பித்தார்.
மத்தேயு–7:28,29




சுதந்திர இந்தியாவின் இரண்டாவது குடியரசுத் தலைவரான

**டாக்டர். சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்**

அவர்களின் பிறந்தநாள் – ஆசிரியர் தினம் – 2023, செப்டம்பர் 05

## இயக்குநர் கடிதம்...

From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

அனைவருக்கும் எங்கள் அன்பின் நல்வாழ்த்துக்கள்.
ஆசிரியர்கள் அனைவருக்கும் இனிய ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள். மணிப்பூர் இனக் கலவரங்களில் தங்களுடைய அருமையானவர்களை, உடைமைகளை இழந்து தவிக்கும் பழங்குடி மக்களுக்காக உரிமைக்குரல் எழுப்பிட நம்மை அர்ப்பணிப்போம். நாம் மனிதாபிமானத்துடன் செயல்பட்டு நாட்டின் அரசியல்-சாசனம் மற்றும் சட்ட திட்டங்களின் நடுநிலைமையை மீட்கப் போராடுவோம். ராஜஸ்தான், ஹரியானா வன்முறைகள் கட்டுப்படுத்தப்பட குரல் கொடுப்போம்.

இனவெறி, மதவெறி மற்றும் வன்முறை இயக்கங்களுக்கு துணைபோகும் ஒன்றிய-மாநில ஆட்சியாளர்கள் மனம்-மாற ஜெபிப்போம். சிறப்பாக, தமிழ்நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மைக்காக ஜெபிப்போம்.

'ஜெப-ஜன்னல்' ஜெப-நேரங்களில் (செப். 08, 15, 22) இணைந்து ஜெபிக்கவும், 'அனைவரும்-ஊழியத்தில்' - என்ற நமது கைபிரதி ஊழிய திட்டத்தில் இணையவும், இரட்சிப்பு வேதாகம போட்டிகளில் பங்குபெறவும் உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

'இரட்சிப்பு' பத்திரிக்கை ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.in/ratchippu.in), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், nms-missionary ஊழியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியங்களுக்காகவும் ஜெபிப்போம். வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்புங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம்: பக்கம் 12-ல் தரப்பட்டுள்ளது).

கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

வேத-வரிகள்-153 மத்தேயு 7:28,29

# தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| இயேசுவானவர் வேதபாரகரைப்போலல்ல, அவர் அதிகாரமுடையவரைப்போலப் பாதித்தபடியினாலே சனங்கள் அவருடைய உபதேசத்தைக்குறித்துப் பிரம்மிக்கார்கள். | இயேசு வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால் ஜனங்கள் அவருடைய போதகத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| இயேசுவின் போதனையைக் கேட்ட மக்கள் கூட்டத்தினர் வியப்பில் ஆழ்ந்தனர். ஏனெனில், அவர்களுடைய மறைநூல் அறிஞர்களைப்போலன்றி இயேசு, அதிகாரத்தோடு அவர்களுக்கு கற்பித்தார். | இயேசுவின் போதனைகளைக் குறித்து மக்கள் வியப்பு அடைந்தனர். ஏனெனில், வேதபாரகர்களாகிய நியாயப்பிரமாண ஆசிரியர்களைப்போலல்லாது இயேசு, அதிகாரம் மிக்கவராய் போதனை செய்தார். |

ஆசிரியர் தினம் சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு.எஸ்.ஜே.டி. தர்மராஜா

# ஆசிரியரான திரியேக கடவுள்

முழுமுதல் ஆசிரியர் – யேகோவா
வியத்தகு ஆசிரியர் – இயேசு
இன்றியமையா ஆசிரியர் – தூய ஆவி

**Jesus Christ - The wonderful teacher**


## Rev. S.J.D. Dharmaraja

Presbyter and Mission Director

Good Tidings Bible Prints Ministries, Saligramam, Chennai-93. South India


இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள். இவ்வுலகம் நிலையற்றது, அது நிறைவாழ்வைத் தருவதில்லை. கடவுளால் மட்டுமே நிறைவாழ்வை நமக்குத் தர முடியும் என்ற உண்மையை திருமறை நமக்கு கற்றுத்தருகிறது. ஆசிரியர் தினத்தைக் கொண்டாடுகின்ற இவ்வேளையில் நமது திரியேக கடவுள் ஒரு ஆசிரியர் என்ற சிந்தையுடன் திருமறையைத் தியானிப்போம்.

யேகோவா-தேவன், ஒரு முழுமுதல் ஆசிரியர்: மீகா 4:1-7

உங்களுக்கு பிடித்த ஆசிரியர் யார்? என்று கேட்டால், நம் கண்முன் வருபவர் நம்மை ஊக்கப்படுத்திய ஒரு ஆசிரியர், விளையாட்டு பயிற்சியாளர் அல்லது ஒரு இசை ஆசிரியராக இருப்பார். அது சரிதான், ஆனால், கடவுள்தான் நமது ஆசிரியர் என்பதாக வேதம் நமக்குச் சொல்லுகிறது. ‘‘நாம் அவருடைய பாதைகளில் நடக்கும்படி அவர் தம்முடைய வழிகளை நமக்குக் கற்பிப்பார்.’’ (மீகா-4:2மு). நன்றாகக் கற்கும் அளவுக்கு நாம் பொறுமையுடனும், கருத்துடனும் இருக்கிறோமா என்பதுதான் இன்று நம் முன் உள்ள கேள்வி. விண்ணரசின் நிறைவாழ்வைப் பெறுவதற்காக மட்டுமல்லாமல், வாழ்வின் பல்வேறு நெறிமுறை களைக் கற்றுக்கொள்வதற்காகவும் நம் முழுமுதல் ஆசிரியராகிய யேகோவா கடவுளை நோக்கிப் பார்க்க அழைக்கப்படுகிறோம்.

சங்கீதம் 32ல் கடவுள் சொல்கிறார், ‘‘நான் உனக்குப் போதித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன். உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்’’ என்று (சங் 32:8). மீகா தீர்க்கதரிசி சொல்கிறார், ‘பூமியிலுள்ள அனைத்து தேசங்களும் தங்கள் ஆசிரியராக, வழிகாட்டியாக கடவுளை நோக்கிக்கொண்டிருக்கிறது’

என்று. கடவுளிடம் பாடங்கள் கற்பதற்கு பணம், பொருள், கால-விரயம், சிபாரிசு என எதுவும் அவசியம் இல்லை. கீழ்ப்படிதலுடன் மாத்திரம் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள கடவுள் நம்மை இன்று அழைக்கிறார். ‘நிறைவாழ்விற்கான நெறிமுறைகளை’ நமக்குக் கற்பிக்கும்படி நாம் கடவுளிடம் ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

இயேசு கிறிஸ்து, வியத்தகு ஆசிரியர்: மாற்கு 1:16-22

ஜனங்கள் இயேசுவின் போதனையைக் கேட்டு ஆச்சரியப்பட்டார்கள், ஏனென்றால் அவர் அதிகாரமுள்ளவராக அவர்களுக்குப் போதித்தார் (மாற்-1:22). அவர், தம் வார்த்தைகளால் மட்டுமல்ல, செயல்களாலும் கற்பித்தார். இயேசு தம் சீடர்களிடம், ‘‘நீங்கள் என்னை போதகர் என்றும் ஆண்டவர் என்றும் அழைக்கி றீர்கள், அது சரிதான்’’ என்றார் (யோவா-13:13). பகைவர்கள்கூட அவரை ‘நல்ல ஆசிரியர்’ என்று அழைத்தனர். இயேசு, எந்த ஆசிரியரையும்விட மேலான வர் (யோவா-7:46) என வேதம் சொல்லுகிறது.

இயேசு தம்மை பின்தொடர்ந்த மக்களுக்கு ஜெபிக்க, உபவாசிக்க, தானதர்மம் செய்ய கற்பித்தார். நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கத்தரிசனங்கள் குறித்த மறைபொருளை கற்பித்தார், அன்பை கற்பித்தார், மன்னிக்கும் பண்பை கற்பித்தார், விண்ணரசு-நிறைவாழ்விற்கான தகவுகளைக் கற்பித்தார், உவமைகள் மற்றும் ஆகம குறிப்புகளுடன் கற்பித்தார். தேவாலய அதிகாரிகளுக்கு கேள்வி-பதில் மற்றும் தர்க்கங்கள் வழியாக ‘நித்தியஜீவன்’ குறித்து கற்பித்தார், கவர்னர்- பிலாத்துவுக்கு ‘சத்தியம்’ குறித்து கற்பித்தார். எருசலேம் தேவாலயத்தை கொள்ளை-கூடமாக மாற்றியவர்களுக்கு தண்டனை (சவுக்கடி) கொடுத்து பாடம் கற்பித்தார். நலிந்த பாமர-மக்களுக்கு உபசரித்து (உணவளித்து) கற்பித்தார். இயேசுவின் போதனையைக் கேட்ட மக்கள் நிறைவாழ்வை பெற்றுக்கொண்டனர்.

இயேசு ஆசிரியர் மட்டுமல்ல, அவர் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர் ஆவார். வேதபாரகர், ஆசாரியர், பரிசேயர், சதுசேயர், எசனேயர், செலோத்தேயர், ஏரோதியர், ஜெபாலய-தலைவர்கள் போன்ற போதக-கூட்டத்தாருக்கு நியாயப் பிரமாணங்கள் மற்றும் தீர்க்கத்தரிசனங்களை விளக்கிச்சொல்லும் இறையியல் ஆசிரியராகத் திகழ்ந்தார், எனவேதான் இயேசுவை நாம் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர் என அழைக்கிறோம். இன்று, வலைதளம் மற்றும் ஊடக வெளிச்சம் பெருத்த நவீன உலகில், நமக்குக் கற்பிப்பதற்கு அதிகமான தளங்கள் உண்டு. ஆனால், நித்திய ஜீவன் என்னும் நிறைவாழ்விற்கு அடுத்த போதனையைத் தரும் ஆசிரியர் என்றால், அது இயேசு ஒருவர் மாத்திரமே.

பரிசுத்த ஆவியானவர் இன்றியமையாத ஆசிரியர்: யோவான் 14:26

இயேசு யோவான் 14:26ல், ‘‘பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லா வற்றையும் உங்களுக்குப் போதித்து, எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட் டுவார்.’’ என்று கூறுகிறார். உண்மையில், பரிசுத்த ஆவியானவர் சீஷர்களுக்கு போதித்தது மட்டுமல்லாமல், நமக்கும் கற்பிக்க ஆசைப்படுகிறார். பரிசுத்த ஆவியானவரால் வரும்

ஞானத்தைப் பெற நம் இதயத்தை திறப்போம்.

பரிசுத்த ஆவியானவர் இன்று உங்கள் ஆசிரியர் ஆக விரும்புகிறார். நீங்கள் அவருடைய மாணவர் ஆக விரும்புகிறீர்களா? உங்களை பரிசுத்த ஆவியானவ ருக்கு சமர்ப்பித்து அவருடைய போதனையின் வெளிச்சத்தில் வாழ நீங்கள் தயாரா? ஆவியானவருக்கு நீங்கள் உங்கள் இருதயத்தை திறந்தால், அவர் உங்கள் ஆசிரியராய் இருந்து உங்களுக்கு கற்பிப்பார்.

ஆவியானவர் சீடர்களுக்கு எப்படி இருந்தாரோ அப்படியே நமக்கும் குருவாக இருந்து நமக்குக் கற்பிப்பார் என்று வேதம் சொல்லுகிறது. நாம் மிகவும் சிக்கலான தருணத்தில் என்ன செய்வது எனத் தெரியாமல் தவிக்கிறபோது ஆவியானவர் நமக்குப் பேசக் கற்றுத்தருகிறார். (2சாமு-232, லூக் 12:11-12, 1கொரி 2:12-13), ஜெபிக்கக் கற்றுத்தருகிறார் (ரோம 8:26), பாவமன்னிப்பு, இரட்சிப்பு, பரலோகஇராஜ்யம் குறித்த சத்தியங்களைக் மிகுந்த கண்டிப்புடன் கற்றுத்தருகிறார் (யோவா 16:8). இவ்விதமாக பரி. ஆவியானவர் நம் வாழ்வின் எல்லா பகுதியிலும் ஆசிரியராய் இருந்து நமக்குக் கற்பிப்பதால் அவர் நமது இன்றியமையாத ஆசிரியராகிறார். இன்று, பரிசுத்த ஆவியானவர் உங்கள் ஆசிரியர் ஆகவேண்டியதின் அவசியத்தை உணர்ந்து கொண்டு, இன்றியமையாத ஆசிரியராகிய ஆவியானவரைச் சார்ந்துகொள்ளுங்கள்.

நாமனைவரும் நேர்மையின் ஆசிரியர்களாக மாறவேண்டும்: மல் 2:6-7

ஆசாரியனுடைய (நம்முடைய) உதடுகள் அறிவைக் காக்கவேண்டும். வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே. அவன் கர்த்தரின் தூதன். அவனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படக்கூடாது, அவன் என்னோடே சமாதானமும் யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்து, அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பவேண்டும் (மல் 2:6-7). மல்கியா தீர்க்கதரிசியின் நாட்களில், ஆசாரியர்களுக்கு (லேவியர்) இந்த நினைப்பூட்டுதல் தேவைப்பட்டது. ஆசீர்வாதங்களை பெரும்பொருட்டு அவர்கள் நேர்மையுடன் வாழ வேண்டும் என கடவுள் சொன்னார். மல்கியாவின் காலத்தின் இறைமக்களுக்கு கொடுக்கப்பட்ட அழைப்பு இன்று நமக்கும் தரப்படு கிறது. ஆகவே, நாம் அனைவரும் நேர்மையின் ஆசிரியர்களாய் மாறுவோம்.

பிரிய விசுவாசிகளே! அநேக நேரங்களில் நாம் நல்ல விஷயங்களை பிறருக்குக் கற்பித்தாலும், நம் வாழ்க்கை-நெறி அல்லது நம் அணுகுமுறை நம் வார்த்தை களுடன் ஒத்துப் போவதில்லை. இந்நிலையிலிருந்து மாற்றம் பெற்றவர்களாக நாம் அனைவருமே நேர்மையான ஆசிரியர்களாக மாற நம்மை அர்பணிப்போம். அதற்காக, நமது மூன்று ஆசிரியர்களாகிய யேகோவா-ஏலோஹீம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவி என்னும் திரியேக தேவனிடம் கருத்துடன் ஜெபிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

வசன தியானம் - 144

# நம் வியத்தகு ஆசிரியர் வகுப்பாசிரியர் இயேசு



அருட்திரு.தர்மராஜா

இயேசு வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகார முடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால் ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.
கலாத்தியர்–5:13,1,18



## ஒரு ஆசிரியருக்கும் மேலானவர்

தியான வசனம்:
கலா-5:1,13,18

நமது வகுப்பு-புகைப்படத்தை நாம் பாதுகாத்து வைத்திருப்போம். ஒவ்வொரு வகுப்புப் படத்திலும், வகுப்பாசிரியர் சிரித்துக்கொண்டிருக்கிறார், இயேசு கிறிஸ்து நமது வகுப்பு-ஆசிரியராக இருக்கும் ஒரு வகுப்பு புகைப்படத்தை கற்பனை செய்து பாருங்கள் அதில் நாம் எந்த இடத்தில் இருக்கிறோம்.

மேல் வரிசையில், சகேயு, தலை நிமிர்ந்து, ‘செல்வத்தைப் பகிர்ந்து கொள்ளத் தயார்’ என்றும், நடுவரிசையில், நிக்கோதேமு சக மாணவர்களிடம், ‘நீங்கள் மீண்டும் பிறக்க வேண்டும்’ என்றும் சொல்வதைக் காண்கிறோம். இயேசுவின் அருகில் பேதுரு, ‘உம்மை நேசிக்கிறேன் ஆண்டவரே!’ என்றும், முன் வரிசையில் ‘இயேசுவே ஜீவ-தண்ணீர்’ எனச் சொல்லி புன்முறுவலுடன் நிற்கும் சமாரியப்பெண் போதினி. இயேசு தங்களுக்கென வடிவமைத்த பாடத்திட்டத்தில் பயன் அடைந்தவர்களே இவர்கள். இவர்களுடைய வகுப்பாசிரியர் - இயேசு, ஒரு ஆசிரியரைவிட மேலான வியத்தகு ஆசிரியர்.

வேதம் சொல்லுகிறது: இயேசுவின் நாட்களில் வாழ்ந்த மக்கள் இயேசுவின் போதனை களைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள், என்று (மத்-7:29). காரணம் என்னவென்றால், அந் நாட்களில் வாழ்ந்த ஆசிரியர்களான வேதபாரகர் மற்றும் பரிசேயரின் போதனையைப் போல் அல்லாமல் இயேசுவின் போதனைகள் (வார்த்தைகள்) ஆற்றல் மிக்கதாயும், வாழ் வளிப்பவையாகவும் இருந்தன. எனவே, அவர்கள் வியந்து (மத்-7:29), இயேசுவை தங்கள் வகுப்பாசிரியராய் ஏற்றனர்.

இன்று இயேசுவின் வகுப்புப் புகைப்படத்தில் நீங்கள் உள்ளீர்களா? இயேசுவின் வகுப்பறை யில் நீங்கள் உள்ளீர்களா? சிந்தியுங்கள். இயேசுவை இரட்சகராக நீங்கள் ஏற்றுக்கொண் டிருந்தால், இயேசு உங்களுடைய பெரிய, வியத்தகு, வகுப்பு-ஆசிரியராக இருப்பார்.

பிரிய விசுவாசிகளே! உங்கள் வகுப்பு-புகைப்படத்தில், ஆசிரியர் - இயேசு இருக்கும் பட்சத்தில், நீங்கள் கற்றுக்கொண்டது என்ன? எத்தகைய மாணவராக உலகம் உங்களை காண்கிறது? இயேசு வின் மாணவராக மற்றவர்களுக்கு ‘நற்செய்தி’ கற்பிக்க கடவுள் உங்களை அழைக்கிறார். எனவே, உலகிற்குள் சென்று நற்செய்தியை அறிவிப்பதற்கான தைரியத்தையும் உறுதியையும் அவரிடம் கேளுங்கள். கடவுள்தாமே உங்கள் அனைவரை யும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

அருட்திரு. எஸ.ஜே.டி. தர்மராஜா, ஊழிய-இயக்குநர், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு மற்றும் இரட்சிப்பு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93, தென்னிந்தியா.

# நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

## Good Tidings Bible-Prints Ministries

### (GOOD SEEDS - எமது கைப்பிரதிகள் - நல்ல விதைகள்)

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழியங்களின் பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்து வருகிறோம் மட்டுமல்ல சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு வகை கைப்பிரதியை வெளியிட ஆகும் செலவு ரூ.4000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவிடுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும் படி அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
| --- | --- |
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மாணக்கின் சாலை - El Camino de la Muerte | - Mr. Frankline Christus, Ch-93 |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, GOOD-TIDINGS BIBLE PRINTS MINISTRIES, FLAT NO. F-1, FIRST FLOOR, BHARATHI FLATS, NO. 4/2-A, BHARATHI STREET, GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI – 93, SOUTH INDIA. WHATS-APP: 9789914463

வேத ஆராய்ச்சி - 76



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Episode - 76

Author: Rev. Dr. D. Suresh

## சங்கீதம் – 76

முன்னுரை:-

இந்த சங்கீதம், கடவுளுடைய மட்டற்ற வல்லமையை விளக்கி அதன்வழியாய் அவரைக் கனப்படுத்துகிற ஒரு பாடலாக அமைந்துள்ளது. எசேக்கியா ராஜாவின் நாட்களில் சனகெரிப்பின் படைகள் யூதாவினால் முறியடிக்கப்பட்டதைக் கொண்டாடும் விதமாக இப்பாடல் எழுதப்பட்டிருக்கலாம் என வேத வல்லுனர்கள் கருதுகின்றனர் (2இராஜா 18:13 - 19:37). எப்படியாயினும் இது, இறைவன் தன் மக்களுக்கு பெற்றுத்தந்த வெற்றியைப் பிரகடனப் படுத்தி, அவரது மாட்சியை உயர்த்துவதன் முக்கியத்தை உணர்த்தும் ஒரு பாடலாகும்.

1. இறைவனின் மாட்சிமை:- (வச:1-3)

இஸ்ரவேல் மற்றும் யூதா என்று இங்கு குறிப்பிடும்பொழுது, அது வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள் அனைவரையும் குறிப்பதாகும். 'கடவுள் தம் பிள்ளைகள் அனைவராலும் அறியப் பட்டிருக்கிறார்' என சங்கீதக்காரர் இங்கே குறிப்பிடுகிறார். அசீரியர்களின் படையெடுப்பி னிமித்தம் இஸ்ரவேலிலிருந்து (வடநாடு) இடம் பெயர்ந்த மக்களின் பெரும்பாலோர் யூதாவில் குடியிருந்தனர். 'அவருடைய நாமம் பெரியது' (வச-1) என்று குறிப்பிடுவதை, 'கனத்துக்கும்' 'மரியாதைக்கும்' 'பயபக்திக்கும்' 'போற்றுதலுக்கும்' உரியது என பொருள் கொள்ளலாம்.

கடவுள் தம் மக்களின் மத்தியில் குடியிருப்பவர், ''சாலேமில் அவருடைய கூடாரமும், சீயோனில் அவருடைய வாசஸ்தலமும் இருக்கிறது'' (வச-2) என சங்கீதக்காரர் எழுதுகிறார். இங்கு 'சாலேம்' என்ற பதம் எருசலேம் என்பதின் சுருக்கமாக தரப்பட்டுள்ளது. 'கூடாரம்' என்ற பதத்திற்கு, எபிரேய மொழியில் 'சிங்கங்கள் தங்கும் இடம்' (Lion's Den) என பொருள் படும் பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது. இறைவன் தன் மக்கள் மத்தியில் ஒரு சிங்கத்தைப் போல, எதிரிகளிமிருந்து அவர்களைக் காப்பாற்றுகிறவராக இருக்கிறார் என்ற கருத்தில் இது சொல்லப்பட்டுள்ளது. கடவுள், தம் ஜனங்களை எதிரிகளின் எல்லாவித போராட்டங்களி னின்றும் காக்கிறவர் என்பதை இங்கு நாம் புரிந்துகொள்ள முடிகிறது. 'அங்கே அவர், தீப்பிளம்போடு பாயும் அம்புகளையும், கேடயங்களையும், வாள்களையும், போராயுதங் களையும் உடைத்தார்' (வச-4) என கடவுளுடைய வல்லமையின் மகத்துவம் குறித்து சங்கீதக்காரர் சொல்கிறார்.

அன்பர்களே! இறைவன் உங்களோடு உள்ளாரா? நீங்கள் எதைக்குறித்தும் கவலை கொள்ள வேண்டியதில்லை. எதிகளின் எப்பேற்பட்ட முயற்சிகளையம் குறித்து கலங்கும் அவசியமும் உங்களுக்கு இல்லை. கர்த்தர் சிங்கத்தைப்போல் இருந்து உங்களைக் காக்கிறவர். அவர் நமது எதிரிகளின் சதிகளை நிர்மூலம் ஆக்குகிறவர் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ளுவோம்.

2. இறைவனது வல்லமை:- (வச: 4 - 10)

‘நீர் ஒளியுள்ளவராய் திகழ்கிறீர், வேட்டையாடும் மலைகளைப்பார்க்கிலும் அதிக கெம்பீர முள்ளவராய் இருக்கிறீர். வீரம் மிக்க மனிதர்கள் கொள்ளையிடப்பட்டு அவர்கள் மரண நித்திரை அடைந்தார்கள். போர் வீரர்களில் ஒருவன்கூட தன் கைகளை உயர்த்த முடியா தவனாக இருக்கிறான்.’ (வச 4-5) என்று கடவுளுடைய வல்லமையின் மகிமை வருணிக் கப்பட்டிருப்பதை இப்பகுதியில் நாம் பார்க்கிறோம். மேலும், ‘யாக்கோபின் இறைவனே, உமது கோபத்தில் குதிரைகள், தேர்கள் ஆகியவை அனைத்தும் செயலிழந்து கிடக்கின் றன.’ (வச-6) என்ற குறிப்பின் மூலம், சிவந்த சமுத்திரத்தில் எகிப்தியர் மீது ஆண்டவரின் வெற்றியை சங்கீதக்காரர் குறிப்பிடுகிறார் (யாத்-14:28,29,30, 15:4,5,10)

‘நீரே, நீர் ஒருவரே பயப்படத்தக்கவர், நீர் கோபமாயிருக்கும்போது உமக்கு முன் நிற்க யாரால் முடியும்?’ (வச-7), ‘இறைவனே! நாட்டில் துன்புற்ற யாவரையும் காப்பாற்று வதற்காக நீர் எழுந்திருந்தபோதே அந்த நியாயத்தீர்ப்பை வழங்கினீர்.’ (வச-9), ஆகிய வசனங்கள் ஆண்டவருடைய வல்லமையையும், நீதியையும் நமக்கு உணர்த்துகின்றன. நம் வாழ்விலும் பலமுறை ஆண்டவர் நமக்கு நன்மைகளை அருளியிருக்கிறார், எத்த னையோ முறை சத்துருக்கள் நம்மை மேற்கொள்ளாதபடி பாதுகாத்திருக்கிறார் அல்லவா? எனவே, ஆண்டவர் செய்யும் பராக்கிரமமான செயல்களுக்காக அவரைப் போற்றுவோம்.

3. இறைவனுக்கு நேர்த்திக்கடன்:- (வச: 11,12)

‘உங்கள் யேகோவாவாகிய இறைவனுக்கு நேர்த்திக்கடன்களைச் (பொருத்தனை) செய்து, அவைகளை நிறைவேற்றுங்கள்’ (வச-11). பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டி லும் பல்வேறு பொருத்தனைகளைக் குறித்து வாசிக்கிறோம். இறைவனுக்கு ஒரு பொருத் தனை செய்தால் அதை நிறைவேற்றுவதில் தவறாமல் இருக்கவேண்டும் என வேதம் நமக்கு ஆலோசனை கூறுகிறது (பிர 5:4-6). யெப்தா’வைப்போல் அவசரமும், முட்டாள்த் தனமுமான (நியா-11:31) பொருத்தனைகளைச் செய்வதைத் தவிர்க்கவேண்டும் (நீதி 20:25). நமது வாழ்வே தேவனுக்கு ஒரு பொருத்தனையாகக் காணப்படவேண்டும்.

முடிவுரை:-

அன்பானவர்களே! நம்முடைய தேவன் மகத்துவமானவர், அவர் சர்வவல்லவர், அவருக்கு எதிர்நிற்பவர்கள் யாரும் இல்லை. எனவே, நம்மை நாமே தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தி, அவர் இதுகாரும் நம் வாழ்வில் நமக்குக் காண்பித்துவந்த உன்னத வழிகளுக்காக அவருக்கு நன்றிசெலுத்தி அவரைக் கனப்படுத்துவோம். கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-154 சரியான பதில் அளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அனிதா மோகன்ராஜ் ERO
12) அரோமா சாத்ராக் TIN
13) ஆர்தர் மாசில்லாமணி CHE
14) அருள்செல்வி VIR
15) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
16) பாமா மாதவன் KAL-AP
17) பாலின் ஜாண் விக்டர் BAN
18) பெல்சி தங்கராஜ் CHE
19) பெனிட்டா பிராங்க்ளின் CHE
20) பெட்டி' பிரின்ஸ் CHE
21) பியூலா ஜேசுராஜன் PON
22) செலினா பென்சி வில்சன் DR, KUW
23) சந்திராபாய் மாசிலாமணி AVD
24) சந்திரா மேரி விஜயன் BAN
25) சந்திரலேகா KAL-AP
26) சந்திரா சாமுவேல் TIN
27) சார்லஸ் ஃபின்னி DR CHE
28) சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
29) சார்லட் டேவிட் CHE
30) சித்ரா பெஞ்சமின் TVL
31) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
32) கிறிஸ்துதாஸ் GOP
33) கிறிஸ்டி ஆயிட்டஸ் MAR-TIN
34) கிறிஸ்டி ஞானராஜ் CHE
35) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
36) டெய்ஸி ஜெபதாஸ் TCY
37) டெய்ஸி சாம் TUT
38) டேனியல் தாமஸ் TIN
39) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
40) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
41) டெல்வின் இம்மானுவேல் TPT
42) தேவமணி ஆபிரகாம் TUT
43) தேவநேசம் ராஜாசிங் CHE
44) டோராபாய் CHE
45) எலிசபெத் செல்லத்துரை CHE
46) எமிமாள் (ஜெஸிக்கா) சாமுவேல் MDU
47) எஸ்தர் D.R. TIN
48) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
49) குளோரி ரவீந்திரன் TIN
50) ஞானம் ஜெபராஜ் TIN
51) ஞானம் பிலிப் CHE
52) ஞானராணி G. TVL
53) ஞானசெல்வி மோசஸ் USA
54) ஞானசுந்தரி நாகராஜன் TIN
55) கோல்டா ஜேசுபாதம் MUM
56) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
57) கிரேஸ்லின் சாந்தி TIN
58) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
59) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
60) கிரேஸியா ஜெயபால் CHE
61) கிரிசெல்டா செய்லர் CHE
62) ஹெலன் ஜான்சிராணி TIN
63) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
64) ஹெலன் திலக் TUT
65) ஹேமா அஜீத் CHE
66) ஹேமா கேப்ரியேல் BAN
67) ஹெப்சிபா அசரியா PONN
68) ஹெப்சிபா மங்களராஜ் TIN
69) ஹிம்லா ராஜகுமாரி CHE
70) இளவரசி ஜோபிதா CBE
71) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
72) ஜமீலா செல்வராஜ் CHE
73) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
74) ஜேன் தர்மராஜ் TIN
75) ஜான்ஸி ராணி CHE
76) ஜான்ஸி சந்தியா MKM
77) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
78) ஜெபா ஜெயராஜ் CHE
79) ஜெபக்குட்டி மோசஸ் TIN
80) ஜெபரஞ்சிதம் மெர்லின் TUT
81) ஜெபசீலி கிளின்டன் CHE
82) ஜெபா சீனி MAR TIN
83) ஜெபஸ்டின் G. TIN
84) ஜெமீலா நிக்ஸன் CHE
85) ஜெனித்தா செல்வின் TIN
86) ஜெனித்தா ஷெருபா ஞானவேல் DHA
87) ஜெனிட்டா ஹெலன் CBE
88) ஜெனிலா CHE
89) ஜெரின் ஸ்டீபன் MUM
90) ஜெஸி செல்லதுரை CBE
91) ஜெஸி ஜெயக்குமார் TIN
92) ஜெயா ஆல்பர்ட் KUM
93) ஜோனா ஸ்டீபன் AVD
94) ஜோஸ்பின் ஜெஸி CHE
95) ஜாய்ஸ் பாண்டியன் CHE
96) ஜூலியட் ஜெபா CHE

...வேதாகம போட்டி-154 பதிலளித்தோர் தொடர்ச்சி

97) ஜுலியட் ஜெயக்குமார் TIN
98) கலா கிருபாகரன் TIN
99) கலையரசி செல்வராஜ் CHE
100) கஸ்தூரி எலியாஸ் TIN
101) கிங்ஸ்லி ரவிகுமார் CHE
102) கிங்ஸ்லி தங்கமணி CHE
103) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
104) லதா மைக்கேல்ராஜ் CHE
105) லீலா டேவிட் CHE
106) லீலா ஜெபராஜ் THA-MAH
107) லீலா ஜோஸப் CBE
108) லீனா எலிசபெத் TPT
109) லில்லி ஜாண்ஸன் CHE
110) லிஸி டென்சிங் TIN
111) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
112) மல்லிகா V. CHE
113) மணிமேகலை ஜெயக்குமார் TIN
114) மரிய பாப்பா CHE
115) மரியாள் ஜே.எஸ். TUT
116) மெஜிலா ஜோஷ்வா TUT
117) மெர்சி தனராஜ் CBE
118) மெர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
119) மெரிட்டா ஜெயபாலன் TCY
120) மியூரியல் புஷ்பராஜ் CHE
121) நதியா லாரன்ஸ் TVR
122) நிக்ஸன் எவர்பிரைட் TIN
123) ஆலிவ் ஜெயபாலன் CBE
124) பாக்யபாய் ஆரோன் TIN
125) பிங்க்லின் தேவமலர் சந்தோஷ் CHE
126) பொன்மணி உத்தமசிங் NAZ
127) பிரேமா பூபாலன் AVD
128) பிரேமா ஜானி PCM
129) பிரேமா ஸ்டாலின் CHE
130) பிரின்ஸ் தயாநிதி CHE
131) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
132) பிரிசில்லா தாஸ் CHE
133) பிரியா ராஜ்குமார் CHE
134) ரேச்சல் ஈஸ்டர் VEL
135) ரேச்சல் கனகராஜ் CBE
136) ராஜகுமாரி சன்னியாசிமுத்து TUT
137) ராஜபிரமீளா TPT
138) ராஜ்மேரி சார்லஸ் KER
139) ரமோலா அதிசயராஜ் TIN
140) ராணி ஃபுளோரா APM-TEN
141) ராணி பிரபாகர் TIN
142) ராணி சாமுவேல்ராஜ் CHE
143) ரத்னா டென்னிஸன் CBE
144) ரத்னாவதி பாண்டியன் CHE
145) ரெஜினா விக்டர் TIN
146) ரோஸ்லின் மார்கிரெட் CHE
147) ரோஸி ஸ்டீபன் CHE
148) ரூபவதி நோபிள் TIN
149) ரூத் ஜாண்ஸன் TIN
150) சலோமி மனோகர் DR. CHE
151) சாமுவேல் டேவிட் TPT
152) சாரா பாலசிங் MDU
153) சரோஜினி எலிசபெத் CHE
154) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
155) செல்வராஜ் K. CBE
156) செல்வராணி ஆல்பர்ட் CHE
157) செல்வராணி G. CHE
158) செல்வி அமிர்தராஜ் TVR
159) ஷாலி எடிசன் CHE
160) சாந்தி ஆசேர் TIN
161) சாந்தி ஆல்பர்ட் PCT
162) சாந்தி ஜெயசீலன் CHE
163) ஷர்மிளா செல்வராஜ் DR. CUD
164) ஷேபா சந்தோஷ் CHE
165) ஷீபா சாம்ஸன் CHE
166) ஷீலா G. PNR-TVL
167) ஷெரீன் ஜெபராஜ் PAN
168) சவுந்தரம் சாலமோன் CHE
169) ஸ்டெல்லா டேவிட் TUT
170) ஸ்டெல்லா கனகராஜ் CHE
171) சுகிர்தா ஆல்வின் CHE
172) சுகிர்தா சின்னதுரை TIN
173) சுஜாதா சாமுவேல் CHE
174) சுமித்ரா B. CHE
175) சுசீலா தியோடர் TCY
176) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
177) தனசீலி ஞானராஜ் CHE
178) தாரா மாணிக்கம் CHE
179) தெல்மா ஸ்டேன்லி MDU
180) உமா குளோரி CHE
181) வனஜா ஹெர்பர்ட் TIN
182) வசந்தா அன்பன் TIN
183) வசந்தா சந்திரசேகர் CBE
184) வசந்தி கருணாகரன் CHE
185) வசந்தி வாசன் CHE
186) விஜயராணி A. CHE
187) விஜி டேனியல் CHE
188) விமலா ஜெயக்குமார் TUT
189) விண்ணரசி ரோஸ் CHE
190) வினோலியா வில்சன் TUT
191) வினோலியா வில்சன் VAN
192) வைலட் கிறிஸ்டோபர் TIN
193) வைலட் சைரஸ் CHE

# PRAYER-WINDOW PRAYER-WINDOW

## ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

### ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் ஆகஸ்டு – 2023

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 11–08–2023 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 18–08–2023 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 25–08–2023 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்நேரங்களில் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் அழைக்கிறோம்.

## ஆசிரியர் தினம்–2023 செப்–5 :: SEP-5 TEACHERS DAY- 2023

### டாக்டர். இராதாகிருஷ்ணன் பிறந்தநாள் – THE BIRTHDAY OF DR. RADHAKRISHNAN

ஆசிரியர் தினத்தின் வரலாறு மற்றும் இயேசு கிறிஸ்துவைக் குறித்த டாக்டர். இராதாகிருஷ்ணனின் பார்வை

சுதந்திர இந்தியாவின் 2-வது குடியரசுத் தலைவரும் சிறந்ததொரு ஆசிரியரியருமான டாக்டர்.சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்தநாளான செப்டம்பர் 5ம் நாள் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது. டாக்டர். ராதாகிருஷ்ணனின் பிறந்தநாளை கொண்டாட சில மாணவர்கள் அனுமதி கேட்டபோது, தனது பிறந்தநாளை ஆசிரியர் தினமாகக் கொண்டாடவேண்டும் என ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார். ஆகவே, 1962-முதல், செப்-5ம் தேதி இந்தியாவில் ஆசிரியர் தினமாக அனுசரிக்கப்பட்டு, பின்னர் யுனெஸ்கோவின் அங்கீகாரத்தையும் பெற்றது. டாக்டர் ராதாகிருஷ்ணனின் கூற்றுப்படி, ‘‘ஆசிரியர்கள் பொறுப்புள்ள குடிமக்களை உருவாக்குபவர்கள். ஆகவே, ஆசிரியர்கள் நம் நாட்டின் மூலைக்கல்.’’

வியத்தகு ஆசிரியரான இயேசு கிறிஸ்துவைக் குறித்து டாக்டர் ராதாகிருஷ்ணனின் கருத்து:
பால் சுதாகர் மேனன் (1922-2002) என்ற தீவிர இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர், டாக்டர் ராதாகிருஷ்ணனை தன் குருவாய் இருக்கக் கோரினார். ஆனால் ராதாகிருஷ்ணன், ‘‘சுதாகர், இயேசு கிறிஸ்துதான் இந்த பூமியில் வாழ்ந்த மிகப்பெரிய குரு. உனக்கு குரு வேண்டுமானால் அது இயேசுவாக இருக்கவேண்டும், நான் அல்ல’’ என்றார். பிரபல இந்து தத்துவமேதையான ராதாகிருஷ்ணனின் இந்த அறிக்கை, சுதாகர் பைபிளைப் படிக்கவும், மஹா-குருவான இயேசுவைப்பற்றி மேலும் அறியவும், அவரை இரட்சகராக ஏற்றுக் கொள்ளவும் தூண்டுதலாக அமைந்தது.
ராதாகிருஷ்ணன் 1924ம் ஆண்டு, ‘‘கிறிஸ்து இயேசுவில் கடவுளின் வெளிப்பாடு முழுமையானது’’ ‘‘கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் சக்தியின் அடையாளம்’’ என்று குறிப்பிட்டார். கிறிஸ்துவின் தெய்வீகம் குறித்து, ‘கடவுளாக மாறிய மனிதனுக்கு இயேசுவே உதாரணம். இயேசுவின் உயிர்த்தெழுதலில் மனிதம் முடிந்து தெய்வீகம் தொடங்கியது. ‘‘மனிதனும் கடவுளும் - அது நீயே’’ என்றார்.

நூல் பட்டியல்: (1) எஸ்.ராதாகிருஷ்ணன், மாறிவரும் உலகில் மதம், ப.65,82 (2) எஸ். ராதாகிருஷ்ணன், தி ஹார்ட் ஆ.்.ப் ஹிந்துஸ்தான் 1931-பக்.96, 1950-ப.85 ஏ.எம்.பரதர் பல்வந்த், கிறிஸ்து-விவேகானந்தர் முதல் ராதாகிருஷ்ணன் வரை. ப.77-80. (4) வலைப்பதிவு: https://nikhilrajgupta.wordpress.com/2017/09/05/561

# வேதாகம போட்டி-155

வேதபகுதி
நாகூம்-மல்கியா

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

வேதவசன இருப்பிடமும் எழுதவேண்டும்

பதிலளிக்க
கடைசி நாள்
செப்டம்பர்-25

1. 'முத்திரை மோதிரமாக வைப்பேன்' என்று யாரைக்குறித்து கர்த்தர் சொன்னார்?
2. அழுக்கு வஸ்திரம் தரித்தவனாய் தூதனுக்கு முன் நின்றது யார்?
3. நீதியின் சூரியனுடைய செட்டைகளின் கீழ் என்ன இருக்கும்?
4. தீவட்டிகளைப்போல் விளங்கி மின்னல்களைப்போல் வேகமாய் பறக்கும் - அது என்ன?
5. தன் 'வலை'க்குப் பலியிட்டு, தன் 'பறி'க்கு தூபங்காட்டுகிறான்' - அவன் யார்?
6. 'இவர்கள் பூமியெங்கும் சுற்றிப்பார்க்க கர்த்தர் அனுப்பினவர்கள்' - சொன்னது யார்?
7. 'மேய்ப்பர் தங்கும் குடில்களும், ஆட்டுத்தொழுவங்களுமாகும்' - அது என்ன?
8. எவர்கள் மேல் மழை வருஷிப்பதில்லை?
9. 'ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும்' - சரியா, தவறா?
10. 'கல்லு சுவரிலிருந்து கூப்பிடும், உத்திரம் மச்சிலிருந்து சாட்சியிடும்' -சரியா தவறா?
11. 'கர்த்தருடைய வழி சுழல் காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது' -சரியா தவறா?
12. 'உங்களை தொடுகிறவன் மனுஷரின் கண்மணியை தொடுகிறான்!' -சரியா தவறா?
13. 'இவை' - வீதிகளில் இடசாரி வலசாரி வரும்:
அ) பிள்ளைகள் ஆ) குதிரைகள் இ) உருளைகள் ஈ) இரதங்கள்
14. 'இவை' செருபாபேலின் கையிலிருக்கிற தூக்குநூலை சந்தோஷமாய் பார்க்கிறது:
அ) 4குதிரைகள் ஆ) 7ஜீவன்கள் இ) கர்த்தரின் 7கண்கள் ஈ) 7ஆவிகள்
15. எனக்கு விரோதமாய் பேசின 'இவை' கடினமாயிருக்கிறது என கர்த்தர் சொல்லுகிறார்:
அ) பேச்சுகள் ஆ) பொய்கள் இ) தூஷணம் ஈ) விஷயங்கள்
16. 'இங்கே' ஒரு வீட்டை கட்டும்படி மரக்காலை கொண்டுபோகிறார்கள்:
அ) ஏதோம் தேசத்தில் ஆ) சீகாரில் இ) எரிகோவில் ஈ) சிநெயார் தேசத்தில்

17. கைகளில் கதிர் வீச்சு - கதிரவன் யார்? காலடியில் காய்ச்சல் ஆச்சு - நடந்தது யார்? பாதத்தால் பூமியை அளந்தது யார்? பார்வையால் பகைவரை கரைத்தது யார்? யார்? இது யார்?
18. புறப்பட்டு வந்த கால், இது புரவிக் கால் அல்ல! வாயடைத்து போன கால், இது வாய்க்கால் அல்ல! வீட்டைக்கட்ட சென்ற கால், இது வாசல்கால் அல்ல! ஈயத்-தகடு மூடிய கால், இது செயற்கை கால் அல்ல! இது என்ன கால்?
19. கட-கட என ஓடிச்சென்றிடும்! படார்-படார் என முட்டி மோதிடும்! மினுக்-மினுக் என மினுங்கி ஒளிர்ந்திடும்! பளிச்-பளிச் என மின்னி விரைந்திடும்! இது என்ன?
20. குறிப்பறிந்து கேட்டது! கூலியாகப் பெற்றது! அளந்து அளந்து தந்தது! அள்ளி வீசச் சொன்னது! குயவன் கணக்கில் எறிந்தது! கூடுதல்தான் பெற்றது! இது என்ன?

**பதில்களை அனுப்பவேண்டிய முகவரி ADDRESS FOR SENDING ANSWERS**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463
Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

THE GREAT GOD EL HA GADOL

## மிகவும் பெரிய கர்த்தர்

EPISODE-52 ஏல் ஹா காடோல் பாகம்-52

தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராய் இருக்கிறீர்.
மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்துகொண்டிருக்கிறீர். சங்கீதம்–104:1

O, Lord God, thou art very great. Thou art clothed with honour and majesty. Psalm-104:1

கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாய் இருக்கிறார். ஒருவராய் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரின் நாமத்தில், இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு செப்டம்பர் மாத கனத்தின் வாழ்த்துக்கள்.

சங்-147:5 நம்முடைய ஆண்டவர் பெரியவரும் மகா பெலமுள்ளவருமாய் இருக்கிறார். அவருடைய அறிவு அளவில்லாதது.

சங்-48:1 கர்த்தர் பெரியவர். அவர் நமது தேவனுடைய நகரத்திலும் தமது பரிசுத்த பர்வதத்திலும் மிகவும் துதிக்கப்படத்தக்கவர்.

எதில் எல்லாம் தேவன் நம் வாழ்வில் பெரியவராக வெளிப்படப்போகிறார்

யாத்-18:9-11 எகிப்தியர் கைக்கும் பார்வோனின் கைக்கும் தம் ஜனங்களைத் தப்புவித்து முழு விடுதலையை அவர்களுக்குத் தந்த தேவன், இடும்பு செய்த காரியத்தில் சத்துருக்களை மேற்கொண்ட தேவன். நம் வாழ்விலும் சகல நன்மைகளையும் செய்து நம்மை சந்தோஷப்படுத்துவார்.

2சாமு-7:22 பெரியவரான அவருக்கு நிகரானவர் இல்லை என்பதை காதுகளால் கேட்டு சகல காரியங்கள் மூலமாகவும் வெளிப்படுத்தி, அதன் மூலம், எல்லா ஜனங்கள் மேலும் உயர்ந்த தேவனாக வெளியரங்கமாகுகிறார் (சங்-99:2).

1யோவா-4:4 உலகத்தில் இருப்பவனைக்காட்டிலும் உங்களில் இருப்பவர் மகா பெரியவர் என்பதை, ஆவியானவர், தம் பிள்ளைகள் மீது இறங்கி அரக்கனாகிய பெலிஸ்தனை முறியடிக்கச் செய்வதன்மூலம் (1சாமு 17:49-51) நமக்கு உணர்த்துகிறார். அல்லேலூயா.

ஜெபம்: சீயோனில் பெரியவராய் இருக்கிற பரிசுத்தமுள்ளவரே! உம்மைத் துதிக்கிறோம். வல்லமையில் பெரியவரே! உம்முடைய வல்லமை எங்கள் மூலமாக வெளிப்படுவதாக. உமக்குப் பயப்பாடாதிருப்பவன் யார்? தேவரீருக்கே சர்வலோகத்தாரும் பயப்படவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இந்திய ராஜ்யம் உமக்குப் பயப்படும்படிக்கும், ராஜாக்கள் உமது பாதங்களில் வந்து பணிந்து கொள்ளும்படிக்கும் அவர்களை அழைத்துவருவீராக. எபிரேயர்-10:11ன் படி செய்து, நீரே பெரியவர் என்பதை வெளிப்படுத்துவீராக. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தொகுப்பு: சகோதரி. C. ஏஞ்சல் B.Sc, திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்துளி வேதவசனக் கதை–148*. . .

# கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற அன்பு

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.



சகோ. அசரியா

வெகு காலத்திற்கு முன் வேட்டையாடுவதில் ஆர்வமிக்க ஸ்காட்லாந்து இளவரசர் ஒருவர் தன் பரிவாரங்களோடு அடர்ந்த காட்டிற்கு வேட்டையாடச் சென்றார். காட்டில் மான்கள் கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தன. 25மான்கள் கொண்ட அந்த மான்-கூட்டம், இளவரசரின் பரிவாரத்தைப் பார்த்தவுடன் மிரண்டு ஓட ஆரம்பித்தது. சிறிது தூரத்தில் அந்த மான்கள் ஒரு குறுகிய நீரோடையை கடக்க வேண்டியதிருந்தது. அந்த மான்-கூட்டத்துக்குத் தலைவனாக இருந்த மான், இந்த ஆபத்தைக் உணர்ந்து, தன் கூட்டத்திலுள்ள மான்களைக் காப்பாற்ற தீர்மானம் செய்தது. அதன்படி, தலைவன்-மான் அந்த குறுகிய நீரோடையில் படுத்துக் கொண்டு ஒரு பாலமாக அமைத்து மற்ற மான்கள் தன் மீது ஓட வழி வகுத்தது. ஒவ்வொரு மானாக, தலைவன்-மான் உடலில் மிதித்து அக்கரைக்கு தப்பியோடி உயிர் பிழைத்தன. ஒவ்வொரு மானும் தலைவன்-மான் மீது துள்ளிக் குதித்த போது தலைவன்-மானின் உடம்பில் காயங்கள் ஏற்பட்டு இரத்தம் பீறிட்டுப் பாய, அந்த நீரோடையே இரத்த வெள்ளமாக காட்சி அளித்தது. இவ்வாறாக, தலைவன்-மான், எல்லா மான்களையும் காப்பாற்றி, கடைசியாக தன் உயிரை நீத்தது. இதைக்கண்ட இளவரசனின் பரிவாரத்தினர், நீரோடையின் அருகிலுள்ள நிலத்தில் ஒரு குழி தோண்டி தலைவன்-மானின் உடலை புதைத்துவிட்டு துக்கத்தோடு திரும்பினார்கள். இளவரசன் அரண்மனை சென்றவுடன் முதல் வேலையாக இனிமேல் யாரும் காட்டுக்குள் வேட்டைக்குச் செல்லக் கூடாது என்ற ஒரு கட்டளையை பிறப்பித்தான்.

பிரியமானவர்களே! ஐந்தறிவு கொண்ட மான், தன் கூட்டத்தைக் காப்பாற்ற தன் உயிரை தியாகம் செய்தது. கிறிஸ்துவோ, உலக மக்களனைவரும் பாவ-சாபங்களினின்று விடுவிக்கப்பட்டு பரலோக பாக்கியம் அடையும்படிக்கு கல்வாரிச் சிலுவையில் தன்னையே அர்ப்பணித்தார். இயேசு கிறிஸ்துவை வாரினால் அடித்து (மத் 27:26) அவர் தலையில் முள்முடி சூட்டினார்கள் (மத் 27:29-30). அவரது கை-கால்களில் ஆணி கடாவி, விலாவில் ஈட்டியால் குத்தினர்கள். அவரது உடலிலிருந்து இரத்தம் பீறிட்டது. நாம் பாவம் செய்யும்போதெல்லாம் கல்வாரி காட்சிகளைச் சிந்திப்போமானால் நமது பாவங்கள், அக்கிரமங்களிலிருந்து விடுதலை பெறமுடியும், மறுபடியும் பாவங்களைச் செய்யாமல் அநேகரை இயேசுவண்டை வழிநடத்த முடியும். மனுக்குலத்துக்காக நிந்தை, பாடுகளை சகித்த இயேசுவைப் போல், சுயத்தை வெறுத்து, நிந்தை சகிக்க நம்மை அர்ப்பணிப்போம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். வேத வசனம் இவ்வாறு கூறுகிறது:

கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். ரோமர் 5:8

கர்த்தர் தமது அன்பினிமித்தம் ஜனங்களை மீட்டார். ஏசாயா 63:9

மனுஷரைக் கட்டி இழுக்கிற அன்பின் கயிறுகளால் கர்த்தர் ஜனங்களை இழுத்தார். ஓசியா 11:4.

EPISODE 14

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு..
## இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




**இந்திய திருச்சபை சரிதை:**
**(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)**
**தொகுதி-3 பகுதி-4**

3.ஐரோப்பிய -ஆசிய தொடர்பும் மோதலும் 4.அக்பரும் வெளிநாட்டு பார்வையாளர்களும்

அக்பர் தன்னுடைய 14ம் வயதில் அரியணை ஏறினார். எனவே தமது படைத்தலைவர்கள், பாதுகாவலர்கள் மற்றும் போதகர்களின் வழிகாட்டுதலின் கீழ் பல ஆண்டுகள் ஆட்சி செய்தார். ஆனாலும், ஆப்கன்களின் படைத்தலைவர் ஹெமு டெல்லியைத் தம் வசம் வைத்திருந்தார். 1556ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் பானிபட் போரில் ஹெமுவின் கண்ணில் அம்பு பாயவே, அவர் மயக்கமானார். அவரது படை சிதறி ஓடியது. அக்பர் வெற்றிபெற்றார்.

அக்பரின் முதல் ஐந்தாண்டு கால ஆட்சியை ஒருங்கிணைத்த பெருமை பைராம் கானையே சாரும். எனினும், அரசவைப் பூசல்களின் விளைவாக அக்பர் அவரைப் பதவியிலிருந்து நீக்கி, மெக்காவிற்கு செல்லும்படி பணிந்தார். ஆனால், மெக்கா செல்லும் வழியிலேயே அவர் கொல்லப்பட்டார். ஆக்ரா, குஜராத், வங்காளம் என அக்பர் வட இந்தியா முழுதையும் தம் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தார். வடமேற்கு இந்தியாவையும் அவர் வலிமைப்படுத்தினார் பின்னர் அவரது கவனம் தக்காணத்தின் பக்கமும் திரும்பியது. அக்பர் ராஜபுத்திர ராஜா பாரமஹாலின் மகளை மணந்தார். ராஜபுத்திரர்கள் நான்கு தலைமுறைகள் முகலாயர்களுக்கு சேவையாற்றினர். ராஜபுத்திரர்கள் அக்பரின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டனர் ஆனால், பலமுறை தோல்விகளை தழுவிய மோவாரின் ராணாக்கள், அக்பருக்கு அடிபணியவில்லை. அக்பரது ராஜபுத்திரக் கொள்கை, அவரது பரந்த சமயக் கொள்கையைத் தழுவியே இருந்தது. 1576ம் ஆண்டு ஹால்திகாட் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் மன்சிங் தலைமையிலான முகலாயப் படைகள் ராணா பிரதாப் சிங்கை முறியடித்தன. இதற்குப் பிறகு, ராஜபுத்திர ஆட்சியாளர்கள் அக்பருக்கு அடிபணிந்தனர்.

நிலவருவாய் நிர்வாகம்: 1580ல் அக்பரது நிலவருவாய் முறை ஜப்தி அல்லது பந்தோபஸ்து முறை என அழைக்கப்பட்டது. ராஜா தோடர்மால் ஒரேமாதிரியான நில அளவை முறையை (தாஹாசாலா முறை) அறிமுகப்படுத்தினார்.

போலஜ் (ஆண்டு தோறும் பயிரிடப்படும் நிலம்), பரௌதி (2ஆண்டு களுக்கு ஒருமுறை பயிரிடப்படுவது), சச்சார் (3-4 ஆண்டுகளுக்கு ஒரு முறை பயிரிடப்படு வது), பஞ்சார் (5ஆண்டுகளுக்கு ஒரு முறை பயிரிடப்படுவது).

கடைசி 10ஆண்டு விளைச்சலின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு நிலங்கள் 4-வகை களாகப் பிரிக்கப் பட்டு, நிலவரி கணக்கிடப்பட்டு பணமாக வசூலிக்கப்பட்டது.

சமயக் கொள்கை:

இந்துஸ்தானத்தில ஒரு பேரரசை நிறுவவேண்டும் என்ற ஆசை அக்பரின் சமயக் கருத்துக்களுக்கு அடிப்படையாக அமைந்தன. ஒரு கடமை தவறாத முஸ்லீமாகவே இருந்த அக்பர், ஆம்பர் நாட்டு இளவரசி ஜோத்பாயை மணந்த பின்னர் புனிதப் பயணவரியை ரத்து செய்தார். 1562ல் ஜிசியா வரியையும் ரத்து செய்தார். தனது இந்து மனைவியர் தங்கள் விருப்பம்போல் தங்கள் கடவுளை வழிபட அனுமதித்தார். 1575ல், அக்பர் தனது புதிய தலைநகரான பதேபூர் சிக்ரியில் இபாதத்கானா என்ற வழிபாட்டு கூடத்தை அமைத்தார். இந்து, சமண, கிறித்துவ, சொராஸ்டிரியம் போன்ற அனைத்து சமய அறிஞர் களையும் அங்கு அழைத்து விவாதிக்க செய்தார்.

அக்பர் 1579ல் தவறுபடா ஆணை வெளியிட்டு தமது சமய அதிகாரங்களை உறுதிப் படுத்தினார். 1582ல் ‘தீன் இலாஹி’ அல்லது ‘இறைநம்பிக்கை’ என்ற தமது புதிய சமயத்தை அறிவித்தார். அது ‘ஒரு’ கடவுள் ‘கோட்பாட்டின் மீது நம்பிக்கை கொண்டதாகும். அனைத்து சமயங்களின் நல்ல கருத்துக்களையும் உள்ளடக்கியது அது. பகுத்தறிவே அதன் அடிப்படை. மூடநம்பிக்கைகளை அது ஆதரிக்கவில்லை. பல்வேறு சமயங்களுக்கிடையே காணப்படும் வேறுபாடு களுக்கு ஒரு பாலமாக அது அமைந்தது. இருப்பினும், அக்பருடைய புதிய சமயம் தோல்வியே கண்டது.

வெளிநாட்டு பார்வையாளர்கள்:

ஜீன்-பாப்டிஸ்ட் டேவர்னியர் (பிரான்ஸைச் சேர்ந்தவர்) ஒரு வணிகப்பயணி. கி.பி.1630-68க்கு இடையில் ஆறு முறை இந்தியாவிற்கு விஜயம் செய்தார். 116 காரட் வைரத்தை கண்டு பிடித்ததற்காக அவர் மிகவும் பிரபலமானவர். ‘இந்தியாவில் பயணங்கள்’ என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

லீட்ஸ் ஒரு ஆங்கிலேயர். இவர் அக்பரின் சபையில் நகைக்கடைக்காரராக நுழைந்தார். ரால்.ஃப் .ஃபிட்ச், நியூபெரி மற்றும் பீட்ஸ் 1585ல் பதேபூர் சிக்ரியில் உள்ள அக்பரின் அசர-சபையை பார்வையிட்டனர்.

டெர்ரி மற்றும் வில்லியன் .ஃபின்ச் ஜஹாங்கிரின் அசர-சபையை பார்வையிட்டனர்.

வணிக-பயணி-பீட்டர் முண்டி 1630-1632ல் ஷாஜகான் ஆட்சியின்போது ஆங்கிலேய இந்தியா வுக்கு வந்தார்.

.ஃபிராங்கோயிஸ் பெர்னியர் (பிரான்ஸ்), ஜீன் பாப்டிஸ்ட் ட்ராவெர்னியர் (பிரான்ஸ்), ஜீன்-டி-தெவெனோட் (பிரான்ஸ்), நிக்கோலா மானுசி (இத்தாலி) போன்ற வெளிநாட்டுப் பயணிகள் முகலாய பேரரசர் ஔரங்கசீப்பின் ஆட்சியின்போது இந்தியாவுக்கு விஜயம் செய்தனர்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் ஜெபக்குறிப்புகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக சமாதானத்துக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் மற்றும் சூடான்-உள்நாட்டுப் போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், வன்முறைவாதம், பிரிவினைவாதம் போன்றவை வேரறுக்கப்பட... பழங்குடி மக்கள் மற்றும் சிறு பான்மை மக்களுக்கு எதிரான வன்முறை-ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... இந்திய ஒன்றிய அரசு மக்களை பாரபட்சமின்றி நடத்த... பொருளாதாரம்-விலைவாசி சீரடைய... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள் இன - மத - மொழி வேறுபா டின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... மத-பிரிவினை வாதங்கள், வன்முறைவாதங்கள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், னச. கிறிஸ்டினா, கி.ஃப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோ.ஃப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

6) திரு. ஆபிரகாம் மனோகர், திரு. டெம்பிள் வில்லியம், திரு. செல்வராஜ், திருமதி. சாந்தி அலெக்ஸ், திருமதி. தங்கசெல்வன், திருமதி. அன்னாள் ஜெபக்கனி, திருமதி. பங்கஜம் வில்சன், திரு. வெஸ்லி சாமுவேல், திரு. நெல்சன் (நகோமி), திரு. பால் நந்தகோபால், திருமதி. சுந்தரிபாய், திரு. அப்பன் டேவிட், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. பிலிப், திருமதி. ஞானரத்தினபாய் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. ராஜேஷ்வரி, னச.ஷீபா, திருமதி. ஐலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. விமலா டேவிட், திருமதி. மேரி கிரேஸ், திருமதி. மகிமா சந்திரன், திரு. பி.ஹெச். ஜெயச்சந்திரன், திருமதி. வசந்தா அன்பன், திரு. டி. மனோகர், திருமதி. சுகிர்தா சின்னதுரை, திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ஜெஸி ஜெயக்குமார் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திரு.ஜே.ஆர். டேவிட், திருமதி. கஸ்தூரி எலியாஸ், திருமதி. சார்லட் டேவிட், திரு. நிக்ஸன் எவர்பிரைட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன் திருமதி. வனஜா ஹெர்பர்ட் ஆகியோரது குடும்பங்களுக்காக...

9) திருமதி. சேர்டியஸ் லி.ஃப்ரா தாவீது அவர்கள் சுக-பிரசவத்தில் அருமையான குழந்தை பெற்றெடுக்க...

# வேதாகம போட்டி-154 (யோவேல் - மீகா) சரியான விடைகள்

1. சீயோன் குமாரத்தி மீகா:-4:13
2. தலைவர்கள் அதிபதிகள் மீகா:-3:10
3. கர்த்தருடைய நாள் ஆமோ:-5:18
4. ஆமோஸ் ஆமோ:-1:1
5. தேவன்-யோனாவிடம் யோனா:-4:9
6. யோனா யோனா:-2:5
7. களங்கள்-ஆலைகள் யோவே:-2:24
8. ஏசாவின் பர்வதத்தை ஒப:-1:21
9. சரி யோனா:-3:3
10. தவறு யோவே:-1:17
11. தவறு ஆமோ:-5:14
12. சரி மீகா:-7:6
13. ஆ - கர்த்தருடைய நாள் யோவே:-1:15
14. ஆ - தைரியவான் ஆமோ:-2:16
15. ஈ - ஒரு பூச்சியை யோனா:-4:7
16. ஈ - கர்த்ருடைய ஆவி மீகா:-2:7
17. சீட்டு யோனா:-1:7
18. யாக்கோபில் மீதியானவர்கள் மீகா:-5:7,8
19. வசன பஞ்சம் ஆமோ:-8:11
20. ஒரு பூச்சி யோனா:-4:7

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL**: 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL**: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTAL ADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.com/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B. ACCOUNT NO**: 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463

# ஆசிரியர் தினம் 2023

**நல்வாழ்த்துக்கள்**

இரட்சிப்பு பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், கைப்பிரதி களப்பணியாளர்கள், திருச்சபை இறைமக்கள் ஆகியோரில் ஆசிரியர்கள், ஆயர்கள் மற்றும் கற்பித்தல்-பயிற்றுவித்தல் பணியில் இருக்கும் அனைவருக்கும் ஞாயிறு-பள்ளி ஆசிரியர்களுக்கும் எங்கள் உள்ளம் கனிந்த ஆசிரியர் தினம்-2023 நல்வாழ்த்துக்கள்.




**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
The due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 8th September 2023.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. வட கொரியா, கடந்த மே-மாதம் ஏவிய செயற்கைக் கோள், வெடித்து சிதறியது. மீண்டுமாக, தற்போது சொலிமா-1 ராக்கெட் மூலம் ஏவப்பட்ட மலிகியோங்-1 உளவுப் பரிசோதனைச் செயற்கைக்கோளும் விண்ணில் வெடித்து சிதறியது.

2. இந்திய கடற்படைக்காக 5 அதி-நவீன போர்க்கப்பல் களை தயாரிக்க இந்துஸ்தான் ஷிப்யார்ட் நிறுவனத்துடன் ஒன்றிய பாதுகாப்பு அமைச்சகம் ரூ.19,000 கோடியில் ஒப் பந்தம். இக்கப்பல்கள் 8-ஆண்டுகளில் இந்தியாவிலேயே கட்டி முடிக்கப்படும்.

3. பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று மாயவரம்-திருச்சி, திருச்சி-கரூர், கரூர்-சேலம் ஆகிய 3-ரெயில் களும் இணைக்கப்பட்டு, ‘சேலம்-மயிலாடுதுறை எக்ஸ் பிரஸ்’ என்ற பெயரில் தினசரி ரெயிலாக இயக்க தென்ன கத்து இரயில்வே ஒப்புதல்.

4. அடிக்கடி வானத்தைப் பார்ப்பதால், ஒருவர் மன அழுத் தத்திலிருந்து மீள முடியும். வானத்தைப் பார்ப்பதால் இதயம் மற்றும் மூளையின் செயல்பாடு சீரடைவதாக ‘தி கிரேட்டர் குட் சயின்ஸ்’ என்ற அமெரிக்க சர்வே தகவல்.

5. செப்-23ல் ஹாங்சொவில் (சீனா) தொடங்கும் 19-வது ஆசிய விளையாட்டு போட்டிக்காக இந்திய மகளிர் கால்-பந்து அணியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இந்துமதி, சந்தியா, சவுமியா ஆகிய 3-வீராங்கனைகள் இடம் பிடித்தனர்.

Posted on: 8th September 2023

To

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2–A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93 TAMIL NADU SOUTH INDIA

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.